விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 067 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 12 செவ்வாய்க்கிழமை (24.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## கடந்த கால தவறுகளின் விளைவை சர்வதேச ரீதியாக இன்று அறுவடை செய்கின்றனர்

### நாமலின் உரை இரத்துத் தொடர்பில் அமைச்சர் வசந்த



(கொழும்பு)

கடந்த காலங்களில் ராஜபக்ஷ அரசாங்கம் செய்த தவறுகளின் விளைவை இன்று சர்வதேச ரீதியாக அறுவடை செய்கின்றனர் என அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

லண்டன் பயணத்தின்போது நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராகப் புலம்பெயர் அமைப்புகள் முன்னெடுத்து வரும் எதிர்ப்புகள் மற்றும் கேம்பிரிட்ஜ் உரை இரத்துச் செய்யப்பட்டமை குறித்து ஊடகவியலாளரால் நேற்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதி

15ஆம் பக்கம் பார்க்க

## 12 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது

(மன்னார்)

மன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்ப்பாணம் ஊரெழுவில்

## கட்டிடப்படியால் தவறிவிழுந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊரெழுவில் கட்டுமானப் பணி நடைபெற்று வந்த மூன்று மாடிக் கட்டிடத்தின் படிக்கட்டால் தவறி விழுந்த

15ஆம் பக்கம் பார்க்க

### சட்டச் சிக்கல்கள் காரணமாகவே

# மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாதுள்ளது



### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஏற்பட்டுள்ள சட்டச்சிக்கல்கள் காரணமாகவே மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாமல் இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### நாகர்கோவில் பகுதியில்

## கஞ்சாவுடன் இளைஞன் கைது

(கரணவாய்)

நாகர்கோவில் பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## தரிசனம்

நாளை
25.02.2026
புதன்கிழமை
தொடக்கம்
வெளிவரும்

வாசிக்கத் தவறாதீர்கள்

## தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றாமல் அரசாங்கத்தால் நிலைத்திருக்க முடியாது



### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றாமல் அரசாங்கத்தால் ஒருபோதும் நிலைத்திருக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை

15ஆம் பக்கம் பார்க்க

## இளவாலையில் மோட்டார் குண்டு அடையாளம்



(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முள்ளானைப்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் ஜனாதிபதியின் நிகழ்வுகளுக்கு 25 இலட்சம் ரூபாய் செலவு

### மாவட்டச் செயலகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்வுகளுக்கு பொது மக்களை அழைத்து வர பேருந்துகளுக்கு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் 25 இலட்சத்து 66 ஆயிரத்து 885 ரூபாய் நிதி செலவழிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது,

யாழ்ப்பாணத்திற்கு கடந்த மாதம் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஜனவரி மாதம் 16ஆம்திகதி மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற "இடம்பெயர்ந்த குடும்

15ஆம் பக்கம் பார்க்க

### சாவகச்சேரி பொலிஸ் பிரிவில்

## விபரீத முடிவெடுத்த இளம் குடும்பஸ்தர் மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கத்தானையில் விபரீத முடிவெடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

40 வயதான இளம் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு தூக்கிட்டு உயிரை மாய்த்

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நிமிர்ந்து நிற்கும் உங்கள் நாளிதழ்

## சுன்னாகம் பொலிஸ் நிலைய
# பொறுப்பதிகாரியாக நிதர்சன் பதவியேற்பு



சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குப் புதிதாக பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட தமிழ் பொறுப்பதிகாரியான சிவானந்தன் நிதர்சன் நேற்று தனது பதவியை உத்தியோக பூர்வமாகக் கடமையேற்றுள்ளார்.

அவர் ஆரம்பத்தில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து அவருக்கு பொலிஸ் நிலையத்தில் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி வரவேற்பளிக்கப்பட்டது.

பின்னர் அவர் உத்தியோகபூர்வ ஆவணத்தில் அறிக்கையை எழுதி, தனது பணிகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

அதனைத் தொடர்ந்து சமூக மட்ட அமைப்பினர், மதகுருமார் உள்ளிட்டோர் நினைவுச் சின்னங்களை வழங்கி அவரைக் கௌரவித்தனர். (ம-7,33,104)

## கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின்
# பிரதம பொறியியலாளராக கருணாநிதி பொறுப்பேற்பு



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் புதிய பிரதம பொறியியலாளராக எந்திரி.கனகசிங்கம் கருணாநிதி அவர்கள் நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் தமது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் நீர்ப்பாசன பொறியியலாளராக கடமையாற்றி பின்னர் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தார்.

நீர்வள முகாமைத்துவம், நீர்ப்பாசனத் திட்டங்களின் மேம்பாடு மற்றும் பராமரிப்பு பணிகள், சிறு மற்றும் நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆகிய துறைகளில் விரிவான அனுபவம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,316)

# புதுக்குடியிருப்பில் முதலீடு செய்து வேலைவாய்ப்பினை உருவாக்குங்கள்

## புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் விஜயகுமார் அழைப்பு




(முல்லைத்தீவு)

தொழில் முயற்சியாளர்கள் புதுக்குடியிருப்பிற்கு வாருங்கள். உங்களுக்கான இடம் காத்திருக்கிறது. புதுக்குடியிருப்பில் முதலீடு செய்து வேலைவாய்பை உருவாக்குங்கள் எனப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இராசரட்ணம் விஜயகுமார் அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று மாலை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வளமான நாடு, வளமான வாழ்க்கை என்ற அரச கொள்கையின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றது.

சிறு, மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காக விசேட தொழில் வலயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தேராவில் பகுதியில் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

10க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முதலீட்டாளர்களுக்கு, அவர்களின் முதலீட்டளவிற்கு ஏற்ப ஒரே இடத்தில் காணிகள் வழங்கப்படும். இப்பகுதியில் அடிப்படை வசதிகள் உள்ளதாகவும் அருகில் உணவகம் மற்றும் தேராவில் குளம் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இரண்டாவது பாரிய தொழில் முயற்சிகளை மேற்கொள்ள விரும்புவோருக்காக ஏ35 வீதிக்கு அண்மித்த மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு சந்திக்கு அருகிலுள்ள ஒட்டுசுட்டான் வீதிப் பகுதி, தேராவில்லுக்கு அண்மித்த பகுதி மற்றும் கோம்பாவில் பகுதி ஆகிய இடங்களில் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தகுந்த திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு காணிகள் வழங்கப்படும்.

மூன்றாவது, பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 50 லீற்றருக்கு மேற்பட்ட பாலை உற்பத்தி செய்பவர்களுக்கு, கால்நடை வைத்தியரின் பரிந்துரையின் அடிப்படையில் புல் வளர்ப்பதற்காக இரண்டு ஏக்கர் வரை காணி வழங்கப்படும்.

அதிக உற்பத்தி செய்பவர்களுக்கு தேவைக்கேற்ப கூடுதல் காணிகளும் வழங்கப்படும் எனவும் கூறினார். தற்போது ஐந்து பேருக்கு இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேராவில் பகுதியிலுள்ள அரச பண்ணையில் காணப்படும் மாமரங்களை பயன்படுத்தி தொழில் முயற்சிகள் மேற்கொள்ள முன்வருமாறு தொழில் முனைவோர்களிடம் அவர் அழைப்பு விடுத்தார்.

புதுக்குடியிருப்பில் தொழில் வாய்ப்புகள் அதிகமுள்ளதாகவும் பாரியளவிலான காணிகளை விவசாயப் பண்ணைகளுக்காக வழங்காமல், பல்துறை தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும்வகையில் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே தொழில்முனைவோர் புதுக்குடியிருப்பிற்கு வந்து முதலீடு செய்து வேலைவாய்ப்புகளை உருவாக்குமாறும், காணி இல்லாதவர்கள் விண்ணப்பித்து அரச கொள்கைக்கேற்ப பயன்பெறுமாறும் பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டார். (ம-7,299)

# கிளிநொச்சி இரணைதீவில் கடல் அட்டை பிடிப்பு

## 10 பேர் கடற்படையால் கைது

சட்டவிரோதமான முறையில் இரவு வேளையில் சுழியோடி கடல் அட்டைகளைப் பிடித்த பத்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


அவர்களிடமிருந்து ஆயிரத்து 232 கடல் அட்டைகள், மூன்று டிங்கி படகுகள் மற்றும் சுழியோடல் உபகரணங்கள் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இரணைதீவு மேற்கு கடல் பகுதியில் நேற்று (23) அதிகாலை முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமான மூன்று டிங்கி படகுகளைக் கடற்படையினர் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது 29 முதல் 54 வயதுக்கு இடைப்பட்ட மன்னார் பள்ளிமுனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், கடல் அட்டைத் தொகுதி, டிங்கி படகுகள் மற்றும் சுழியோடல் உபகரணங்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி மீன்பிடி பரிசோதகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ம-7)

# சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய 81 வயது முதியவர்



(கொழும்பு)

இலங்கையில் 81 வயதுடைய முதியவர் ஒருவர் தற்போது நடைபெற்று வரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு நேற்று தோற்றியுள்ளார்.

கிரிபெரியாவைச் சேர்ந்த 81 வயதான நிமல் சில்வா என்ற வயோதிபரே இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றியவராவார்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், இது வெறும் தனிப்பட்ட சாதனை மட்டுமல்ல, தேசிய கல்வி முறைமையின் நிலையாகும். தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கத்திற்கு ஒரு வலுவான செய்தி இதன் மூலம் அனுப்பப்படுகிறது என்றார். (ம-7)


கண்ணீர் அஞ்சலி

எமது பழைய மாணவர் சங்க தாய்ச் சங்க முன்னாள் உபதலைவரும் எமது சங்கத்தின் மூத்த உறுப்பினருமான திரு.பொ.சந்திரநாதன் அவர்களின் அன்பு மனைவியார்

அமரர் திருமதி
ரதி சந்திரநாதன்

(ஓய்வு நிலை உப அதிபர்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

அவரது பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!! (C-5044)

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
KHC OSAs (Colombo, Sydney, Melbourne, UK & Canada)





கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விஷேட கல்வித்துறை விரிவுரையாளர் திரு.க.சுரேந்திரன் அவர்களின் அன்பு மாமியார்

அமரர் தனலட்சுமி
இராசரத்தினம்

மண்ணில் 02.01.1950
விண்ணில் 22.02.2026

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்
கோப்பாய்
(C-5043)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கி வாடிக்கையாளர்களை இலக்கு வைத்து நிதி மோசடி!

## எச்சரிக்கும் பொலிஸார்




**(கொழும்பு)**

**பொலிஸ் அதிகாரிகள் போன்று பாசாங்கு செய்து பொதுமக்களிடமிருந்து நிதி மோசடி செய்யும் பாரிய கும்பல் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் அதன் கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவு பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இந்த மோசடி தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், ஏற்கனவே சில சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் நிலையான தொலைபேசி எண்களை ஒத்த வெளிநாட்டு எண்களிலிருந்து வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களைத் தொடர்பு கொள்கின்றனர்.

ஆரம்பத்தில் வங்கி அதிகாரிகள் போலப் பேசி, உங்கள் கணக்கு தொடர்பாக முறைப்பாடுகள் வந்துள்ளதாகக் கூறி பயமுறுத்துகின்றனர்.

பின்னர், சட்ட நடவடிக்கை எடுப்பதாகக் கூறி, பொலிஸ் அதிகாரிகள் போன்ற ஆடை அணிந்த நபர்களுடன் வீடியோ அழைப்புகளை ஏற்படுத்துகின்றனர்.

உங்களது வங்கிக் கணக்கைப் பாதுகாப்பதாகவோ அல்லது சரிபார்ப்பதாகவோ கூறி, அவர்கள் வழங்கும் பல வங்கிக் கணக்குகளுக்குப் பணத்தை மாற்றச் சொல்கின்றனர். இவ்வாறு பெறப்படும் பணம், பின்னர் இடைத்தரகர்கள் மூலம் கிரிப்டோகரன்சியாக மாற்றப்படுவதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு பொதுமக்களுக்கு விடுத்துள்ள அறிவிப்பில்,

வங்கி விபரங்கள், கடவுச்சொற்கள் அல்லது OTP எண்களை எவருக்கும் பகிர வேண்டாம். இலங்கை பொலிஸார் ஒருபோதும் வீடியோ அழைப்புகள் மூலம் விசாரணைகளை நடத்தி பணப் பரிமாற்றங்களைக் கோருவதில்லை.

இவ்வாறான சந்தேகத்திற்கிடமான அழைப்புகள் வந்தால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது பொலிஸ் தலைமையகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். இந்த மோசடி தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்கு மாறும், இவ்வாறான நிதி இழப்புகளைத் தவிர்க்க ஒத்துழைக்குமாறும் வேண்டு கோள் விடுத்துள்ளது. (நி)

# துறைமுகங்களில் தேங்கியுள்ள 2 ஆயிரம் வாகனங்கள்

## விடுவிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் தேங்கியுள்ள 2ஆயிரம் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை விடுவிக்குமாறு வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வாகன இறக்குமதி தொடர்பான பரிந்துரைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவதற்கு முன்னரே இந்த வாகனங்கள் முற்பதிவு செய்யப்பட்டமையால், அவற்றை விடுவிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் பிரசாத் குலதுங்க சிங்களப்பத்திரிகை ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த வாகனத் தொகுதிக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்டன.

வாகனங்களை விடுவிப்பதற்கான நிபந்தனைகளில் ஏதேனும் சலுகைகளை வழங்கியாவது அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதன் மூலம் அரசாங்கத்திற்கு உரிய வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த வாகனங்களை விடுவிக்க முடியாமல் போயுள்ளதால், புதிதாக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை நிறுத்தி வைப்பதில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# தொல்பொருள் பட்டதாரிகளை வரலாறு கற்பிக்க அனுமதியுங்கள்

## எதிர்கட்சித் தலைவர் வலியுறுத்து



(கொழும்பு)

ஆசிரியர் சேவைக்கான திறந்த மற்றும் வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் நிலவும் சிக்கல்கள் குறித்து கல்வி, மனிதவலு மற்றும் மனித மூலதனம் குறித்த துறைசார் மேற் பார்வைக் குழுவில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கருத்துக்களை முன்வைத்தார்.

திறந்த போட்டிப் பரீட்சைக்கான பட்டத்தின் செல்லுபடியாகும் திகதியை 2025. 06.30 இலிருந்து 2026. 03.05 வரை அரசாங்கம் நீடித்திருப்பதை அவர் வரவேற்றார்.

இதேபோன்று, வரையறுக்கப்பட்ட அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்கான செல்லுபடியாகும் திகதியையும் (தற்போது 2023.02.10) நீடிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அரச சேவையின் ஆரம்ப நிலைகளில் பணியாற்றும் பட்டதாரிகள், பணியில் இருக்கும்போது மேலதிக கல்வியைப் பெற்று முதுகலை வரை உயர்ந்துள்ளனர்.

அவர்களது திறமையைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கும் ஆசிரியர் சேவையில் இணைய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

தொல்பொருள் துறையில் பட்டம் பெற்ற பெருமளவிலான பட்டதாரிகள் இருந்தபோதிலும், தற்போதைய சுற்றறிக்கையின்படி அவர்களால் "வரலாறு" பாடத்தைப் பயிற்றுவிக்க முடியாதுள்ளது. அவர்களுக்கு நிலவும் இந்த அநீதியை நீக்கி, வரலாறு கற்பிக்க அனுமதி வழங்குமாறு அவர் வலியுறுத்தினார். (நி)

# 3இலட்சம் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகத்தை ஆரம்பித்தது லிட்ரோ

(கொழும்பு)

நாட்டில் நிலவும் எரிவாயு தட்டுப்பாட்டைத் தணிக்கும் வகையில், 3இலட்சம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த விநியோக நடவடிக்கைகள் நேற்றுத் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

3,900 மெட்ரிக் தொன் எல்பி எரிவாயுவை ஏற்றிய கப்பல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததுடன், அதன் தரையிறக்கும் பணிகள் அன்றே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாளை புதன்கிழமை மற்றும் எதிர்வரும் சனிக்கிழமை மேலும் இரண்டு எரிவாயு கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன.

இன்று முதல் நாளொன்றுக்கு 1இலட்சம் சிலிண்டர்களை சந்தைக்கு விடுவிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் நிலவும் தட்டுப்பாடு படிப்படியாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சந்தையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கேள்வியின் அதிகரிப்பு காரணமாகவே விநியோகத்தில் இடையூறுகள் ஏற்பட்டதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

# 4 இலட்சத்தை எட்டியது தங்கத்தின் விலை

(கொழும்பு)

சர்வதேசச் சந்தை நிலவரங்களுக்கமைய உள்நாட்டுச் சந்தையிலும் நேற்று தங்கத்தின் விலை 4ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அந்தவகையில், தற்போதைய தங்க விலை நிலவரப்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்றுக்கு 4இலட்சம் ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது.

22 கரட் தங்கம் பவுண் ஒன்றுக்கு 3இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயாகவும், விற்பனை செய்யப்படுகிறது.

இதன்படி, 24 கரட் தங்கத்தின் ஒரு கிராமின் விலை 50ஆயிரம் ரூபாயாகவும், 22 கரட் தங்கத்தின் ஒரு கிராமின் விலை 46ஆயிரத்து 250 ரூபாயாகவும், விற்பனை செய்யப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## உலகக் கிண்ண ரி-20 தொடர்

# இந்தியாவின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்த தென்னாபிரிக்கா



**உலகக் கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடரின் சூப்பர் 8 சுற்றில் இந்தியாவிற்கு எதிரான போட்டியில் தென்னாபிரிக்க அணி 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.**

ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறுகிறது. லீக் சுற்றுப் போட்டிகள் நிறைவடைந்து சூப்பர் 8 சுற்றில் மொத்தம் எட்டு அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேற பலப்பரீட்சை நடத்தி வருகின்றன.

சூப்பர் 8 சுற்றின் மூன்றாவது போட்டியில் இந்தியா மற்றும் தென் ஆபிரிக்கா அணிகள் நேற்று முன்தினம் மோதின.

அகமதாபாத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற தென் ஆபிரிக்கா அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

முதலில் களமிறங்கிய தென் ஆப்பிரிக்கா அணி 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. அதன்பின் மில்லர் - ப்ரேவிஸ் ஜோடி பொறுப்புடன் விளையாடி ஓட்டங்களை சேர்த்தது. அதிரடியாக விளையாடிய ப்ரேவிஸ் 45 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மறுமுறையில் சிறப்பாக விளையாடிய மில்லர் 63 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.


20 ஓவர்கள் முடிவில் தென் ஆபிரிக்கா அணி 7 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்கள் குவித்தது. கடைசி நேரத்தில் அதிரடியாக விளையாடிய ஸ்டப்ஸ் 44 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்திய அணி தரப்பில் பும்ரா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதையடுத்து 188 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய இந்தியா 26 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இஷான் கிஷன் டக் அவுட்டாக திலக் வர்மா 1 ஓட்டத்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து 3 போட்டிகளில் டக் அவுட்டான அபிஷேக் சர்மா இந்த போட்டியில் 15 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். வாஷிங்டன் சுந்தர் 11 ஓட்டங்களில் வெளியேறினார்.

18.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த இந்தியாவால் 111 ஓட்டங்கள் மட்டுமே சேர்க்க முடிந்தது. இதன்மூலம் 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென் ஆபிரிக்கா வெற்றியை சுவைத்தது. (3)

# 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்திடம் வீழ்ந்த இலங்கை



ஐ.சி.சி ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் சுப்பர் 8 சுற்றில், இலங்கை அணிக்கெதிரான நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இங்கிலாந்து அணி 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கண்டி பல்லேகலயில் நடைபெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணியின் சார்பில் பில் சோல்ட் 62 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணியின் சார்பில் துனித் வெல்லாலகே அதிக பட்சமாக 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்தநிலையில் 147 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 16.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 95 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியை தழுவியது. (3)

## நடேஸ்வரா கல்லூரி ஆண்டு விழாவை முன்னிட்டு

# வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி



யாழ்.காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த போட்டியில் மொத்தமாக 8 பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன.

இதில் யாழ்.இராமநாதன் கல்லூரி மற்றும் அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி ஆகியன இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளதுடன் மூன்றாவது இடத்தினை நிர்ணயிக்கும் போட்டியில் மானிப்பாய் பெண்கள் கல்லூரியுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மோத உள்ளது.

அத்துடன் எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழாவின் தொடக்க விழாவில் இறுதிப்போட்டி நடைபெறும் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீரிழிவு கழகமும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நடத்தும் "இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்" எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மதியம் 1 மணி வரை மருதனார்மடம் சந்தையில் இடம்பெறவுள்ளது.

முன்னாள் மருத்துவபீட பீடாதிபதி சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் எஸ். ரவிராஜ் நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

நிகழ்வில் நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத்தம் உடல் திணிவுச் சுட்டி போன்ற பரிசோதனைகளும் மற்றும் வைத்திய ஆலோசனைகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

எனவே அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நீரிழிவு கழகத்தினர் அறிவித்துள்ளனர். (8)

## கைதடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நிதி வழங்குமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

**கைதடி வடக்கு பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை அமைப்பதற்கென கைதடி வடக்கைச் சேர்ந்த அன்பர் ஒருவரால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு வழங்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் க.சிவபாதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைதடி வடக்கில் குடும்ப நல உத்தியோகத்தர் அலுவலகம், பிணியாய்வு நிலையம் உள்ளிட்டவை ஏறத்தாழ 33 ஆண்டுகளுக்கு மேலாக தற்காலிக இடங்களில் மாறிமாறி இயங்கி வருகின்றன.

கைதடி வடக்கில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தர கட்டடம் என்பது மிகவும் அவசியமானது.

இதனூடாக கைதடி வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, தென் கிழக்கு மற்றும் கைதடி மத்தி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயனடைவார்கள்.

நிரந்தர கட்டடம் இல்லாத நிலையில் ஆரம்ப சுகாதார நிலையம் கைதடி வடக்கு மாதர் சங்க கட்டடத்தில் பல இன்னல்களுக்கும் மத்தியில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

எனவே நன்கொடையாக கிடைத்த காணியில் நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய தென்மராட்சி பிரதேச செயலர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும்என கோரிக்கை விடுத்தார். (8-30)

## விவசாய உற்பத்திக்கு தேவையான உபகரணங்கள் வழங்கி வைப்பு



(கரணவாய்)

2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், கரணவாய் வடக்கு மற்றும் துன்னாலை மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான நவீன உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி நடைபெற்றது.

விவசாயிகள் எதிர்கொள்ளும் மின்சார மற்றும் எரிபொருள் செலவுகளைக் குறைக்கும் நோக்கில், சூரிய மின்கலம் மூலமான நீர் இறைக்கும் மோட்டார் தொகுதிகள் மற்றும் விவசாய உற்பத்திக்குத் தேவையான நவீன உபகரணங்கள் என்பன குறித்த கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களிடம் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் அவர்களால் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது. (8-60)

## நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

"கருவி" மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையத்தினால் இ.தனஞ்சயன் எழுதிய இராசாவின் தடயங்கள்" நூல் அறிமுக விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் பொதுநூலகத்தில் கருவி நிறுவன ஸ்தாபகர் கனகலிங்கம் தர்மசேகரம் தலைமையில் இடம் பெறவுள்ளது. (8)

## அறுவடைசெய்த நெல்லினை பகிர்ந்துண்டு வாழும் விவசாயி

(தருமபுரம்)

கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் வசித்து வரும் விவசாயி ஒருவர் ஒவ்வொரு வருடமும் பெரும்போக அறுவடை முடிவடைந்ததும் தம்மால் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையில் அறுவடை செய்த நெல்லினை தமது பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ள வறிய குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றார்.

இந் நிலையில் கடந்த 20 ஆம் திகதி தருமபுரம் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் வைத்து அறுவடை செய்த நெல்லின் ஒரு பகுதியில் 30 குடும்பங்களுக்கு ஒரு மூடை நெல் வீதம் வழங்கினார்.

தமது பெயரினையோ அல்லது தமது முகத்தினையோ ஊடகங்களுக்கு தெரிவிக்க விரும்பவில்லை எனவும், தன்னால் முடிந்த வரை ஒவ்வொரு வருடமும் இதேபோன்று உதவிகளை வழங்கி வருவேன் எனவும் குறித்த விவசாயி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-316)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு வள்ளிபுனம் றேடியன் முன்பள்ளியில் கல்வி பயிலும் 28 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வேலாயுதம் கரிகாலனின் ஏற்பாட்டில் , Croydon Academy of Eastern Arts நிதி அனுசரணையில் றேடியன் முன்பள்ளியில் கல்வி பயிலும் 28 மாணவர்களுக்கு புத்தக பைகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (8-299)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டுவிழா நிகழ்வை முன்னிட்டு விழா ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடுவதற்கான பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கல்லூரியின் பழைய மாணவர்கள், ஓய்வு நிலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (8)

## வெற்றிலை மென்றவாறு வியாபாரம் 15 ஆயிரம் ரூபா தண்டம்

(கரணவாய்)

வெற்றிலை மென்றவாறு இறைச்சி வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பொதுச்சந்தையில் இறைச்சி வியாபாரம் செய்யும் போது வெற்றிலை மென்ற வண்ணம் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதாக வல்வெட்டித்துறை நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகரிற்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த இடத்திற்கு சென்று அதனை உறுதிப்படுத்தியிருந்தார்.

நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரான ப. தினேஷ் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் இறைச்சிக்கடை உரிமையாளருக்கும் இறைச்சியைக் கையாண்டவருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்தார். குறித்த வழக்கானது கடந்த 20 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது நீதிவானால் 15 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. (8-60)



யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. (படம்-சுமேன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரசபை மறுசீரமைப்பு

# போராட்டத்தில் குதிக்கும் ஊழியர்கள்

**(கொழும்பு)**

**இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்தவுடன் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக மின்சார பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

புதிய திட்டத்தின் கீழ் 6 நிறுவனாங்கள் உருவாக்கப்படவுள்ளன. அதன்படி, இந்த நிறுவனாங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்காக மாத்திரம் மாதம் ஒன்றுக்கு 180 இலட்சம் ரூபா செலவிடப்படும். 15 இலட்சம் ரூபா செலவை "அதிகம்" எனக் கூறிவிட்டு, 180 இலட்சம் ரூபா செலவை ஏற்க அரசாங்கம் தயாராவது ஏன் என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மின்சார சபையை இரத்து செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 28ஆம் திகதி வெளியிடுவதற்கு அமைச்சின் செயலாளர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை அரசாங்கம் தன்னிச்சையாக முன்னெடுத்தால், சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்தமையை தொடர்ந்து ஒட்டுமொத்த மின்சார சபை ஊழியர்களும் பாரிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்குவார்கள் என அவர் தெரிவித்தார். (நி)

# விசேட சுற்றிவளைப்பில் 640 சந்தேகநபர்கள் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் ஊடாக 640 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

இதன்போது 27 ஆயிரத்து 567 பேர் பொலிஸாரினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் குற்றங்கள் தொடர்பாக நேரடியாக அடையாளம் காணப்பட்ட 26 சந்தேகநபர்கள் கைதாகியுள்ளதுடன் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 369 பேரும் கைதாகினர்.

மேலும் மது போதையில் வாகனம் ஓட்டியதற்காக 308 பேரும், கவனக் குறைவாக வாகனம் ஓட்டியதற்காக 77 பேரும் கைது செய்யப்பட்டனர்.ஏனைய போக்குவரத்து குற்றங்களுக்காக 4,153 பேர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 300 | 300 | 250 | 220 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 150 | 160 | -- | 350 |
| பச்சைமிளகாய் | 450 | 300 | 300 | 300 | 350 | 500 |
| தக்காளி | 160 | 150 | 150 | 200 | 150 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 | 180 | 110 |
| கோவா | 150 | 150 | 200 | 250 | 200 | 160 |
| கரட் | 250 | 380 | 400 | 400 | 350 | 300 |
| பூசணி | 120 | 120 | 150 | 150 | 100 | 100 |
| புடோல் | 150 | 150 | 200 | 200 | 150 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 200 | 120 | 180 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 | 250 | 220 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 200 | -- | -- |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 500 | 350 | 400 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 300 | 250 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 280 | 300 | 300 | -- | 220 |
| பயற்றங்காய் | 500 | 300 | 400 | 400 | 300 | 200 |
| லீக்ஸ் | 350 | 340 | 400 | 300 | 280 | 270 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 200 | 200 | 170 |
| கறிமிளகாய் | 450 | 600 | 400 | 450 | 500 | 550 |
| முருங்கைக்காய் | -- | 4000 | 4000 | -- | 2500 | -- |
| போஞ்சி | 400 | 300 | 400 | 300 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 300 | 200 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 60-140 | 200 | 100 | -- | 50 |
| தேசிக்காய் | 150 | 80 | 200 | 200 | 150 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 170 | 150 | 120-180 | -- | 110 |
| இராசவள்ளி | 550 | 500 | 300 | 350 | -- | 350 |
| வெங்காயப்பூ | 150 | 80 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 200 | 150 | 150 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 | -- | 90 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | -- | 200 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 150 | -- | 100 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3357

**வர்ஷாங்கி**




**ரிதுர்சி**




**மிதுலன்**




**இந்துஜா**




**குமுதினி**




**சதீஷ்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 200 அடி பள்ளத்தில் கவிழ்ந்த ஆட்டோ



(நுவரெலியா)

டயகம நகரத்தில் இருந்து வெஸ்ட் டயகம நட்போன் தோட்டத்திற்கு செல்லும் பிரதான வீதியில் முச்சக்கர வண்டி கவிழ்ந்த சம்பவம் நேற்று முன்தினம் 22 இரவு இடம் பெற்றுள்ளது.

சுமார் 200 அடி பள்ளத்தில் முச்சக்கர வண்டி ஒன்று கவிழ்ந்ததில் முச்சக்கர வண்டியில் சென்ற நான்கு பேர் நுவரெலியா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு உள்ள னர் என டயகம பொலிஸார் தெரிவித்தனர். இவ் விபத்து குறித்து டயகம பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி)

### பயங்கரவாத தடைச்சட்டத்தை

# நீக்கக்கோரி அம்பாறையிலும் கையெழுத்து வேட்டை



(அம்பாறை)

நாட்டிலிருந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க கோரியும் புதிதாகக் கொண்டு வரப்பட இருக்கின்ற பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாத்தல் எனும் புதிய சட்டத்தையும் நீக்கக் கோரியும் வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் கையெழுத்து சேகரிக்கின்ற பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தைக்கு முன்பாகவும் கையெழுத்து சேகரிக்கும் பணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. (நி)

# கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## சபை நிதி-2026

01. தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, கொக்குவில் அவர்கள் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணைகளில் விபரிக்கப்பட்டவாறு கோருகின்றார்.

02. இக்கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கோரப்படுகின்றது.

03. இக்கேள்வியானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை நல்லூர் பிரதேசசபை, கொக்குவில் எனும் முகவரியில் 2026.02.24 ஆம் திகதி தொடக்கம் 2026.03.09 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 03.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, கொக்குவில் எனும் முகவரிக்கு 2026.03.10 ஆம் திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| இல | கேள்வி எண் | சேவை விபரம் | தேவைப்படும் எண்ணிக்கை | மீளளிக்கப்படும் கேள்விப்பிணை வைப்பு | சேவை வழங்குவதற்கான சேவைக்காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(10)/03/AC C/CCTV/2026 | திருநெல்வேலி சந்தையில் கண்காணிப்பு கமரா சேவை வழங்கல் | 01தொகுதி | 40000.00 | 31.03.2026-31.03.2027 |
| | | வீதிகளில் கண்காணிப்பு கமரா வழங்கல் சேவை வழங்கல் | 50 | | |
| 02 | NP/14/41(10)/03/AC C/Sound/2026 | கழிவகற்றல் வாகனங்களுக்கான ஒலி பெருக்கி சேவை வழங்கல் | 10 | 10000.00 | 31.03.2026-31.03.2027 |
| 03 | NP/14/41(10)/03/AC C/GPS/2026 | கழிவகற்றல் வாகனங்களுக்கான (GPS) தடமறி கருவி சேவையினை வழங்கல் | 15 | 10000.00 | 31.03.2026-31.03.2027 |
| 04 | NP/14/41(10)/03/AC C/Price List/2026 | திருநெல்வேலி சந்தைப்பகுதியில் மரக்கறி விலைப்பட்டியலினை தொலைக்காட்சியில் நாளாந்தம் காட்சிப்படுத்தல் சேவை. | 04 | 10000.00 | 31.03.2026-31.03.2027 |
| 05 | NP/14/41(10)/03/AC C/Solar Light/2026 | வீதிகளுக்கான சூரியப்படல் மின்விளக்கு பொருத்துதல் சேவை | 30 | 10000.00 | 31.03.2026-09.03.2027 |
| 06 | NP/14/41(10)4/02/W /JCB/2026/02 | Backhoe Loader வாகன சேவையினை மணித்தியால அடிப்படையில் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளல் | 400 மணித்தியாலங்கள் | 25000.00 | 31.03.2026-31.12.2026 |

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 222 2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.

2026.02.24

(C-5042)


## 31 ஆம் நாளில் நினைவு கூருகிறோம்



தோற்றம் 1966.06.02

மறைவு 2026.01.25

எம்முடன் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் சேவையாற்றிய ஆசிரியை திருமதி.சிவமாலா அவர்களின் அன்புக் கணவர்

அமரர். இராசரத்தினம் இராஜகுமார்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

(6903)

பிரிவால் துயருறும்

யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் சிவமாலா ஆசிரியையுடன் சேவையாற்றியவர்கள்

## சேவை நலன் பாராட்டு

திரு.
வேலாயுதர் சிவானந்தநாதன்
(S.L.T.S-I)
(பகுதித் தலைவர்- வரலாற்றுப் பாட ஆசிரியர்)

சேவை விபரம்

- யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
  01.06.1999 - 23.09.2012
  (நூலகர், முகாமைத்துவ உதவியாளர், ஆசிரியர்)
- யா/இளவாலை கன்னியர்மடம் ம.வி
  24.09.2012 - 09.10.2016
- யா/இணுவில் மத்திய கல்லூரி
  10.10.2016 - 24.02.2026



அரச சேவையில் இருபத்தி ஏழு வருடங்கள் தன்னை இணைத்து எமது கல்லூரியில் வரலாறுப் பாட ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் சேவையாற்றி 24.02.2026 இன்றுடன் பணி ஓய்வு பெறும் அவர் தம் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

BEST WISHES

வாழ்த்துவோர் :
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் நலன்புரிச் சங்கம்
யா/இணுவில் மத்திய கல்லூரி.

(6900)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# நேபாளத்தில் ஆற்றில் கவிழ்ந்து பேருந்து விபத்து!




(காத்மண்டு)

நேபாளத்தில் போகாரா விலிருந்து காத்மண்டுவுக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற பேருந்து ஆற்றில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.

நேபாளத்தில் நேற்று அதிகாலை போகாராவிலிருந்து காத்மண்டுவுக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டு இருந்த பேருந்தில் பயணிகள் 44 பேர் இருந்தனர்.

பேருந்து திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு படையினர் நீண்ட நேரம் போராடி மீட்பு பணி மேற்கொண்டர்.


இந்த விபத்தில் பயணிகள் 17 பேர் உயிரிழந்ததுடன் அவர்களில் ஆறு பெண்கள் மற்றும் பதினொரு ஆண்கள் என அடையாளம் காண ப்பட்டனர்.

மேலும் 8 பெண்கள், 18 ஆண்கள் மற்றும் ஒரு சிறுமி உட்பட மொத்தம் 27 பேர் காயமடைந்தனர்.

இவர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

பேருந்து பலத்த சேதம் அடைந்துள்ளது. இந்த விபத்து அதிகாலை 2 மணிக்கு நிகழ்ந்துள்ளது. (3)

# சூடுபிடித்து



(டில்லி) • த
தமிழ் ந
ஆட்சிய
கேள்வி
மாகப் பே
தமிழக அ

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, ஆளும் தி.மு.கவிற்கும் விஜயின் தமிழக வெற்றிக் கழகத்திற்கும் இடையே நேரடி அரசியல் யுத்தம் தொடங்கியுள்ளது.

ஊழலற்ற நிர்வாகம் என்பதைத் தனது முதல் நிலைப் பாடாகக் கொண்டுள்ள விஜய், தி.மு.கவைத் தனது பிரதான அரசியல் எதிரியாக அறிவித்துக் களமிறங்கியுள்ளார்.

இந்த நிலையில், விஜயின் அரசியல் வருகையை ஒரு சவாலாகக் கருதவில்லை என்று தெரிவிக்கும் தி.மு.க, மக்கள் நலத்திட்டங்களே மீண்டும் தங்களை அரியணையில் ஏற்றும் என நம்பிக்கை தெரிவிக்கிறது.

எனினும் இம்முறை தேர்தலில் விஜயின் பங்கு மிக அதிகளவில் செல்வாக் குச் செ படுகின் வரை விஜய்

மிக கட்சிய சேரவி

ஆ இருப் இருக்

# ஈரானில் மீண்டும் வெடித்தது மாணவர்கள் போராட்டம்



(டெஹ்ரான்)

ஈரானில் கடந்த மாதம் நடைபெற்ற போராட்டங்களின்போது நிகழ்த்தப்பட்ட கொடூரமான ஒடுக்குமுறைக்குப் பிறகு, தற்போது மீண்டும் அந் நாட்டு மாணவர்கள் மிகப்பெரிய அளவில் அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

தலைநகர் டெஹ்ரானில் உள்ள ஷெரீப் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் உள்ளிட்ட பல கல்வி நிறுவனங்களில் திரண்ட மாணவர்கள், "சர்வாதிகாரி ஒழியட்டும்" போன்ற முழக்கங்களை எழுப்பி பேரணிகளை நடத்தினர்.

இந்தப் போராட்டங்களின்போது அரசு ஆதரவாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஆங்காங்கே மோதல்கள் வெடித்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற வன்முறையில் சுமார் 7,000இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கும் நிலையில், அந்தப் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும், தங்களின் உரிமைகளை வலியுறுத்தியும் மாணவர்கள் இந்தத் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மறுபுறம், ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டாலும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரான் மீது இராணுவத் தாக்குதல் நடத்துவது குறித்து ஆலோசித்து வருகிறார்.

அடுத்த பத்து நாட்களுக்குள் சுமூகமான உடன்பாடு எட்டப்படாவிட்டால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எச்சரித்துள்ளதால், ஈரான் தற்போது ஒரு போருக்கான சூழலை எதிர் கொண்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இயங்கும் சில எதிர்க்கட்சிகள் இந்தத் தாக்குதலை ஆதரித்தாலும், ஈரானுக்குள் இருக்கும் மற்றொரு தரப்பினர் வெளிநாட்டுத் தலையீட்டை கடுமையாக எதிர்க்கின்றனர்.

பொருளாதார நெருக்கடியால் தொடங்கி தற்போது ஆட்சி மாற்றத்தை நோக்கிய ஒரு பெரிய புரட்சியாக இந்தப் போராட்டங்கள் உருவெடுத்துள்ளதால், ஈரான் அரசு பெரும் அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ளது. (3)



# இந்தியாவில்
## பாரம்பரிய மு

(டில்லி)

இந்தியாவில் நடைபெற்ற "இந்தியா ஏஐ தாக்க உச்சிமாநாடு 2026" ஒட்டுமொத்த உலகத்தையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

ஷாங்கிரி-லா ஈரோஸ் நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்ற "இந்தியா ஏஐ தாக்க உச்சிமாநாடு 2026"இல் கூகுள் நிறுவனத்தின் CEO சுந்தர் பிச்சை முதல் மைக்ரோ சாப்ட் நிறுவனர் பில்கேட்ஸ் வரை பல்வேறு உலகத் தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

சர்வதேச கவனம் பெற்றுள்ள இந்த மாநாட்டில் ஹியூமனாய்டு ரோபோ ஒன்று விருந்தினர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஹோட்டல் நிறுவனம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட எக்கோ என பெயரிடப்பட்ட இந்த ரோபோ, இந்தியப் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் விதமாக, ஹோட்டலின் மற்ற பெண் ஊழியர்களைப்போல பாரம்பரிய புடவை அணிந்து கம்பீரமாக காட்சியளித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ள்ள தமிழக அரசியல்!



**...தமிழகச் சட்டசபைத் தேர்தலில் ...நாட்டிலே எந்தக் கூட்டணி ...அமைக்கப் போகின்றது என்ற ...அனைவர் மத்தியிலும் அதிக ...பேசப்பட்டு வருகின்றமையால் ...அரசியல் சூடுபிடித்துள்ளது.**

...செலுத்துகின்ற விடயமாக காணப் ...கின்றது. தமிழ் நாட்டைப் பொறுத்த ...ரைக்கும் உச்ச நட்சத்திரமாக இருந்த ...ய் நேரடியாக அரசியலில் வந்துள்ளார். ...மிகப் பிரபல்யமான வேறு எந்தக் ...சியும் இவருடன் கட்சிக் கூட்டணி ...ரவில்லை.

ஆகவே விஜய் இம்முறை தேர்தலில் ...ருப்பதென்பது ஏனைய பழமையாக ...ருக்கின்ற கட்சி கூட்டணிக்கிடையில் ஒரு வித்தியாசமான போக்கை தமிழ் நாட்டில் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

திராவிடக் கொள்கைகளுடன் கூடிய ஒரு புதிய மாற்றாகத் தன்னை முன்னிறுத்தும் விஜய், இளைஞர்கள் மற்றும் நடுநிலை வாக்காளர்களை ஈர்க்கத் தீவிரமாகப் பணியாற்றி வருகிறார்.

இவ்வாறு, கூட்டணிக் கணக்குகள் மற்றும் விமர்சனங்களுக்கு மத்தியில், தமிழ்நாடு அரசியல் தற்போது இந்த இரு துருவங்களை நோக்கியே அதிகளவில் சுழன்று கொண்டிருக்கிறது.

அத்துடன் சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டியிடுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை தனது மானசீகத் தலைவனாகக் கொண்டு ஈழத்தமிழினத்தின் நலன் சார்ந்த சிந்தனைகளை தனது தேர்தல் களத்தில் முன் நிறுத்திய சீமான் வேறு கட்சிகளுடன் கூட்டணி சேராது தனித்துப் போட்டியிடுவது அவரின் தற்துணிவையும் கொள்கையையும் பிரதிபலிக்கின்றது.

அவ்வாறு கூட்டணி சேர்ந்து போட்டியிட்டால் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவது கடினம் என அவர் அதனை மறுத்து வருகின்றார்.

தமிழகத்தில் பா.ஜ.க நேரடியாக முதலமைச்சர் வேட்பாளராக வருவது கடினமான தொன்றாக உள்ளது. அ.தி.மு.கவுடன் தான் கூட்டணியாகச் செயற்படுகிறார்கள். இதனால் தனி பா.ஜ.க என்ற நிலை தமிழ்நாட்டில் இன்னும் உருவாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


எனவே தமிழ்நாட்டுத் தேர்தலில் யார் வெற்றி பெற்றுமுதலமைச்சர்ஆவர் என்ற பல கேள்விகள் மக்கள் மத்தியில் எழுந்துள்ள நிலையில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. (3)

## ...இடம்பெற்ற 'AI' மாநாடு; ...றைப்படி வரவேற்ற ரோபோ



...அனைவரையும் கவர்ந்தது.

எக்கோ ரோபோ புடவை கட்டிய காட்சிப் பொருளாக மட்டுமல்லாமல், விருந்தினர்களுக்கு தேவையான உதவிகளை செய்யும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.



எக்கோ ரோபோ போன்று செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை விருந்தோம்பல் துறையில் எப்படி பயன்படுத்துவது என்பதை வெளிக்காட்டுவதே இந்த ஏற்பாட்டின் நோக்கம் என்று ஷாங்கிரி - லா ஈரோஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (3)

## கடும் பனிப்புயல் காரணமாக முழுமையாக முடங்கியது நியூயோர்க்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைத் தாக்கியுள்ள மிக மோசமான பனிப்புயல் காரணமாக, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணி முதல் அந்த நகரம் முழுமையாக முடக்கப் பட்டுள்ளது.



நகரிலுள்ள அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரதப் பாதைகள் மூடப்பட்டுள்ளன.

பேருந்துகள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் விமானப் போக்குவரத்துக்கள் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அவசர சேவைகளைத் தவிர ஏனைய அனைத்துப் பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.



பாதுகாப்புப் படையினர், அத்தியாவசிய சேவையாளர்கள் மற்றும் அனர்த்த நிவாரணப் பிரிவினரின் வாகனங்களைத் தவிர, ஏனைய தனியார் வாகனங்கள் வீதிகளில் பயணிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க் நகர மேயர் சொஹ்ரான் மம்தானி விசேட ஊடக சந்திப் பொன்றை நடத்தி, மக்கள் அனைவரும் தங்களது பயணங்களைத் தவிர்த்து வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு அவசர கோரிக்கை விடுத்துள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல்களில் ஈடுபட்டுவிட்டு போராட்டம் நடத்துவது வேடிக்கையானது

## கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர்

(மன்னார்)

**இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடிக்கும் தமிழக மீனவர்கள், கைது செய்யப்பட்ட பின்னர் தங்களுக்கு நியாயம் கோரிப் போராடுவது எந்த விதத்திலும் நியாயமற்றது என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.**

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சமீபத்தில் காரைக்கால், பாண்டிச்சேரி மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த 47 மீனவர்களும் அவர்களது 6 படகுகளும் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான படகுகள் எல்லைதாண்டி வரும் நிலையில், ஓரிரு படகுகள் மட்டுமே கைது செய்யப்படுவது எமது நீண்டகாலப் பிரச்சினைக்கு ஒரு சிறிய தீர்வாகவே அமைகிறது. இதுகுறித்து அரசாங்கத்திற்கு நாங்கள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகிறோம்.

இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்தால் கைது செய்யப்படுவோம் என்று தெரிந்தே தமிழக மீனவர்கள் இக்குற்றச்செயலைச் செய்கிறார்கள்.

வடபகுதி தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல், எமது கடல் வளங்களைச் சூறையாடி, மீன்பிடி உபகரணங்களையும் அவர்கள் சேதப்படுத்துகிறார்கள்.

குற்றச்செயலில் ஈடுபட்டுவிட்டு, பின்னர் படகுகளை விடுவிக்கக் கோரியும் மீனவர்களை விடுதலை செய்யக் கோரியும் தமிழகத்தில் உண்ணாவிரதம் மற்றும் போராட்டங்களை நடத்துவது வேடிக்கையானது. தவறு செய்துவிட்டு அதை நியாயப்படுத்த எவருக்கும் உரிமையில்லை. இந்திய மத்திய மற்றும் தமிழக அரசுகள் தமது மீனவர்கள் இலங்கை எல்லைக்குள் நுழைவதைத் தடுக்க நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். (8-285)

# இன்று ஒரு தகவல் 547

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## புத்தகப் புழுக்கள்

ப்த்து வருடத்திற்கு முன்பு வாங்கிய திருக்குறள் புத்தகம் சார் இது. இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறேன்!" என்று சொல்கிறது சரி.

"பத்து வருடத்திற்கு முன்பு வாங்கிய நியூஸ் பேப்பர் சார் இது இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறேன் பாருங்கள்" என்று சொன்னால் அது சரியாக இருக்குமா?

படிப்பதிலே சில வகை உண்டு. அதைப் பற்றி ஆங்கில அறிஞர் பேக்கன் சொல்லியிருக்கிறார். "நூல்களிலே பலவகை உண்டு அதிலே சிலதை ருசி பார்க்க வேண்டும்! சிலதை அப்படியே முழுங்கிவிட வேண்டும்! சிலதை சுவைத்து அப்படியே ஜீரணம் செய்துவிட வேண்டும்!" என்று அவர் சொன்னார்.

அவர் சொன்ன பிரகாரம் மனிதன் நடந்து கொள்கிறானோ இல்லையோ, பூச்சிகள் அவர் வார்த்தைக்கு அப்படியே மரியாதை கொடுத்துக்கொண்டிருக்கிறது!

எவ்வளவு பெரிய மனிதன் எழுதிய புத்தகமாக இருந்தாலும் சரி, பூச்சிகள் ரொம்ப சுலபமாக அரித்து சாப்பிட்டு விடும்.

"இந்த புத்தகத்தை அப்படியே கரைத்து குடிச்சிருக்கிறேன் சார்" என்று நாம் மார்தட்டிப்பது உண்டு! மார்தட்டிக்காமல் அதை பிராக்டிகலா செய்வது புத்தகப் புழுக்கள்தான்!

இந்தப் பூச்சிகளிலே நிறைய வகை உண்டு. சரி... இந்த பூச்சிகளிடமிருந்து புத்தகங்களைக் காப்பாற்றுவது எப்படி? புத்தகங்களை அடுக்கி வைக்கும் இடத்திலே நல்ல காற்றோட்டம் இருக்க வேண்டும்! வெளிச்சம் இருக்க வேண்டும்! புத்தகங்களை தரையில் அடுக்கி வைக்கக்கூடாது! சுவரிலே ஒட்டிய போலவும் வைக்கக்கூடாது!

மண்ணெண்ணெய் வாசனை இருந்தால் கறையான் நெருங்காது! நாப்தலின் உருண்டைகள் போடலாம். அதற்கு என்று சில கிருமிநாசினிகள் உண்டு. அதை தூவலாம். (Gamaxine Powder, D.D.T. Dieldrin) நூல்கள் அழிவதைத் தடுப்பதற்கு மேல்நாடுகளிலே என்ன செய்கிறார்கள் தெரியுமா?

கிருமிநாசினியை அச்சடிக்கின்ற மையிலேயே கலந்து விடுகிறார்கள் சார்! நம் நாட்டிலே பல நூல்களை கட்டடம் செய்ய அதாவது பைண்ட் செய்ய உபயோகிக்கின்ற துணியை சிவப்பு அல்லது மஞ்சள் நிறத்திலே நனைத்து எடுத்து விடுகிறார்கள். நிறத்தை ஏற்றும்போது கலக்குகின்ற பொருளிலே கிருமிநாசினியின் சக்தி இருக்கிறது! அதனாலே நூல்கள் சேதமடைவதில்லை! மனிதனுக்கு வியாதி வந்தால் ஒதுக்கி வைத்து விடுகிறோம்! அது மாதிரி புத்தகத்துக்கு வியாதி வந்தாலும் ஒதுக்கி வைத்துவிட வேண்டியதுதான்.

மனிதனுக்கு செய்வது மாதிரியே புத்தகத்துக்கும் வைத்தியம் செய்ய வேண்டும். முதலிலே நோய் பரவுகின்ற வகையை தடைப்படுத்த வேண்டும். அதன்பின் நோய்க்கு சிகிச்சை அளிக்க வேண்டும்.

இதற்குள்ளே சில மருத்துவர்கள் இருக்கிறார்கள் நூல்கள் நோய் மருத்துவர்கள். லெனில் மாநில நூலகம் ரொம்பப் பெரிதாம். அதனாலே தினசரி பயனடைகின்ற வாசகர்கள் 8000 பேராம். அந்த நூலகத்திலே இருக்கின்ற அடுக்குகளின் நீளம் எவ்வளவு தெரியுமா? 200 மைல்! ஆமாம்! அவ்வளவு பெரிய நூலகம்! அதிலே நூல் நோய் மருத்துவர்கள் 200 பேருக்கு மேலே இருக்கிறார்களாம்!

பொலிவும் வலிவும் இழந்து நலிந்துபோன புத்தகங்களுக்கு ஊட்டமும் சிகிச்சையும் கொடுத்து நல்ல நிலைமைக்கு கொண்டு வருவதுதான் அவர்களுக்கு வேலையாம்! இன்னொரு விடயம் தெரியுமா உங்களுக்கு?

புத்தகங்கள் மூலமாகக்கூட வியாதிகள் பரவும்! நூல்கள் மூலமாக அம்மை, குளிர், ஜுரம் இதுமாதிரி நோய்கள் பரவுவதை அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். சிலசமயம் அந்த நோய் உள்ளவர்கள் வீட்டிலே இருக்கிற புத்தகங்களை கொளுத்தி விடுவதும் உண்டாம்! இத்தாலியிலே ஒரு சோதனை நடத்தினார்களாம்.

எலும்புருக்கி நோய் புத்தகங்கள் மூலமாக பரவுவது இல்லை என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்! ஆகக்கூடிய, புத்தகத்தைப் படித்து விடயம் தெரிந்துகொள்வது ஒரு பக்கம் இருந்தாலும், படிக்காமலே அதை பற்றி தெரிந்துகொள்ள வேண்டிய விடயமும் நிறைய இருக்கு! இன்னொரு முக்கியமான விடயமும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது புத்தகத்தை ஒருவரிடம் கடன் கொடுத்தால் அதை அவரிடமிருந்து திருப்பி வாங்குவது எப்படி? இது ரொம்ப முக்கியம். ஒருவர் இருந்தார் ரொம்ப கறார் பேர்வழி வீட்டிலே ஒரு நூல்நிலையம் வைத்திருந்தார் எவ்வளவு புத்தகமும் இருந்தது.

பக்கத்து வீட்டுக்காரர் வந்து சார்! ஒரு நாவல் கொடுங்கள் எடுத்துக்கொண்டு போய் படித்துவிட்டு திருப்பி பத்திரமாக கொண்டுவந்து கொடுத்துவிடுகிறேன் என்று கேட்டார். அதற்கு இவர், "உங்கள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போக வேண்டாம்! இங்கேயே வாங்கள் இங்கேயே உட்கார்ந்து படியுங்கள்! படித்ததும் புத்தகத்தை திருப்பிக் கொடுத்துவிட்டுப் போங்கள் அதுதான் நல்லது!" என்றார். "சரி என்று அப்படியே செய்தார் அவர்.

கொஞ்சநாள் கழித்து இவர் அவர் வீட்டுக்குப் போனார். ஒட்டடைகுச்சி இருந்தால் கொஞ்சநேரம் இரவல் கொடுங்கள்!" என்று கேட்டார். இதற்கு அவர் "உங்கள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டுப் போக வேண்டாம்! இங்கேயே வாங்கள்! இங்கேயே ஒட்டடை அடியுங்கள்! வேலை முடிந்ததும் திருப்பி கொடுத்து விட்டுப் போங்கள்! அதுதான் நல்லது!" என்றார்.


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1985-இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc, London
எதிர்பார்ப்பு: படித்தபெண்
தொ.இ: B/16580

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்:பூரம்
12இல்செவ்
உயரம்:5'7"
தகைமை/தொழில்-O/L, Shop
எதிர்பார்ப்பு: படித்தபெண்
தொ.இ: B/16581

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
7இல்சூரிசெவ்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: A/L, Work(pvt)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16584

பிறப்பு: 1997- இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி-பா-64
உயரம்:6'1"
தகைமை/தொழில்:LLB, Lawyer
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16587

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்:மகம்
1இல்செவ்
உயரம்:6"
தகைமை/தொழில்: Diploma Course, Work (Gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16589

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-2001-இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
2இல்செவ்
உயரம்:5'
தகைமை/தொழில்: BBA, Assistant Accountant
தொ.இ: G/16600

பிறப்பு-1995-RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BFA, Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15604

பிறப்பு-1991-RC
நட்சத்திரம்-சித்திரை
உயரம்-5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15606

பிறப்பு-1986-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc, Nursing (USA)
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/16521

பிறப்பு-1992-இந்து
நட்சத்திரம்:சித்திரை
உயரம்: 5'8"
தகைமை/தொழில் : BSc, MBA, Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/12171

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 21)

# Precast & Pre-Stress தொழில்நுட்ப வீடுகள்




வீட்டுக்கட்டுமானத் துறையில் நவீன தொழில்நுட்பங்களின் வருகை வேலையை வேகமாகவும் தரமானதாகவும் மாற்றியுள்ளது. தொழில்நுட்பம் இணைந்த கட்டுமானம் தான் எதிர்கால வீடமைப்பின் அடையாளமாக மாறியுள்ளது. இதில் Precast (முன்னரே வார்ப்பு செய்தல்) மற்றும் Prestressed (முன் அழுத்தம் கொடுத்தல்) ஆகிய இரண்டு முறைகளும் மிக முக்கியமானவை.

**Precast என்றால் என்ன?**

Precast என்பது வீட்டு சுவர், தூண், கீறு, slab போன்ற கொங்கிரீட் கூறுகளை கட்டுமானத் தளத்தில் அல்லாமல், தொழிற்சாலையில் முன்கூட்டியே தயாரித்து, பின்னர் தளத்திற்கு கொண்டு வந்து பொருத்தும் முறை.

இதன் மூலம்:

- வேகமான கட்டுமானம்
- ஒரே மாதிரியான தரம்
- குறைந்த வேலைவாய்ப்பு செலவு
- குறைந்த பொருள் வீணாக்கம் என பல நன்மைகள் கிடைக்கின்றன.

**Pre-Stress என்றால் என்ன?**

Pre-Stress கொங்கிரீட் என்பது கொங்கிறீட்டுக்குள் உள்ள உயர் வலிமை கொண்ட கம்பிகளை முன்கூட்டியே இழுத்து அழுத்தம் கொடுத்து தயாரிக்கும் முறை. இதனால்:

- அதிக span (நீளமான இடைவெளி)
- குறைந்த தடிப்பு slab
- அதிக நீடித்த தன்மை கிடைக்கிறது.

**இலங்கையில் Precast தொழில்நுட்ப முன்னேற்றம்**

இலங்கையில் precast & pre-stress தொழில்நுட்பத்தை முன்னெடுத்து வரும் முக்கிய நிறுவனங்களில்:

- ICC (International Construction Consortium)

ICC நிறுவனம் இலங்கையில் precast மற்றும் pre-stressed slab systems வழங்கி வருகிறது.

ACOTEC Precast Wall Panels

Pre-stressed slab solutions

Factory-controlled quality production என பல modern systems மூலம் வேகமான மற்றும் தரமான கட்டுமானத்தை ஊக்குவிக்கிறது. இவை குறிப்பாக apartment projects மற்றும் நடுத்தர வீடமைப்பு திட்டங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**❖NERD Centre (National Engineering Research & Development Centre)**

இலங்கையின் அரசு ஆராய்ச்சி நிறுவனம்.

Pre-cast, Pre-stressed flat soffit slab system உருவாக்கியுள்ளது.

பாரம்பரிய slab முறையை விட சுமார் 20% வரை செலவு குறைப்பை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உள்ளூர் தொழில்நுட்ப மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**மற்ற நிறுவனங்கள்**

ELS Construction போன்ற நிறுவனங்கள் pre-stressing yard வசதிகளுடன் slab மற்றும் beam தயாரிக்கின்றன.

RBS போன்ற நிறுவனங்கள் lightweight cement wall panels மூலம் வேகமான walling solutions வழங்குகின்றன.

**ஏன் இந்த தொழில்நுட்பம் முக்கியம்?**

இன்றைய இலங்கையில்: வேலைக்காரர் பற்றாக்குறை, கூலி, உயர்வு, கட்டுமான கால தாமதம், பொருள் விலை உயர்வு இந்த சவால்களுக்கு ஒரு தீர்வாக precast தொழில்நுட்பம் பார்க்கப்படுகிறது.

**ஒரு precast வீடு:**

- 30% வரை வேகமாக முடிக்கலாம்
- 20%-30% வரை structural செலவு குறைக்கலாம் (சூழ்நிலைக்கு ஏற்ப)
- குறைந்த plaster வேலை
- அதிக துல்லியமான finishing

**முடிவுரை**

"கனவு இல்லம் மெய்ப்பட" தொடரில் நாம் பாரம்பரிய கட்டுமான முறைகளைப் பார்த்தோம். இப்போது, தொழில்நுட்பத்துடன் கூடிய precast & pre-stress வீடுகள் என்பது நவீன காலத்தின் தீர்வாக உருவெடுத்து வருகிறது.

வீடு என்பது ஒருமுறை செய்யும் முதலீடு.

அதில் வேகம், தரம், நீடித்த தன்மை, செலவு கட்டுப்பாடு ஆகிய நான்கு அம்சங்களும் இணைந்திருக்க வேண்டும்.

அடுத்த பகுதியில், Foundation முதல் Finishing வரை நடைமுறை வழிகாட்டி என்று விரிவாக பார்க்கலாம்.

**இலங்கை பொறியியலாளர் சங்கம், வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

24.02.2026
மாசி 12, செவ்வாய்க்கிழமை
சப்தமி காலை 7.56 மணிவரை

அட்டமி பின்னிரவு 5.33 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 3.56 மணிவரை
சுப நேரம் 11.00-12.30 மணிவரை
இராகுகாலம் 3.30-5.00 மணிவரை

சந்திராஷ்டமம்: சித்தம், சுவாதி

**வளவன்**




சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் கைகூடும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு.




ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மறதியால் சில தொல்லைகள் ஏற்படலாம்.




ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.




குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாடுகளில் நம்பிக்கை கூடும் பணத்தேவைகள் எளிதில் கைகூடும்.




சுப செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு.




எதையும் பல முறை யோசித்துச் செய்வது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், அன்பு நண்பர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.




வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.




இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வியாபார விரோதம் விலகும், ஆரோக்கியம் சீராகும்.




நண்பர்கள் வட்டம் அதிகரிக்கும் முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மற்றவர்களை கீழே தள்ளிவிட்டு நீ மட்டும் ஏணியில் ஏறிவிட முடியாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 986





என் தந்தையின் உயிர் நண்பரும் என் பக்திக்கு உரியவருமான முதன் மந்திரி அநிருத்தரும் சொல்லி அனுப்பினாரே?" என்றார்.

"முதன் மந்திரி அநிருத்தர்! தங்கள் தந்தையின் பிராண சிநேகிதர்! ஆகையினால் தங்கள் தந்தையின் பிராணனைத் தாமே அபகரிக்கப் பார்க்கிறார். தங்களுடைய பக்திக்கு உரியவர்! ஆகையால் தங்களுக்கு அடுத்த பட்டம் இல்லாமற் செய்யப் பார்க்கிறார்"

"ஏன்? ஏன்?"

"தாங்கள் வெறிபிடித்தவர் என்றும், தெய்வ பக்தி இல்லாதவர் என்றும் அவருக்கு எண்ணம். தங்கள் தம்பிக்குப் பட்டம் கட்டி வைத்து அவனை வீர வைஷ்ணவனாக்கி இந்தச் சோழ நாட்டையே வைஷ்ணவ நாடாக்கிவிட வேண்டுமென்பது அவருடைய விருப்பம். தங்களுடைய தம்பி நடுக்கடலில் காணாமற் போனபோது அவருடைய எண்ணத்திலே மண் விழுந்தது!"

"அதற்காக என்னைக் கடம்பூர் வரமால் தடுக்க வேண்டிய அவசியம் என்ன?"

"அவர்களுடைய அந்தரங்கத்தையெல்லாம் தங்களிடம் நான் சொல்லி விடலாம் அல்லவா?"

"உனக்கு எப்படி அவர்களின் அந்தரங்கம் தெரியும்?"

"ஐயா! அந்த வைஷ்ணவன் ஆழ்வார்க்கடியான் சகோதரி நான் என்பதை மறந்து விட்டீர்கள்."

"உண்மையாக நீ அவனுக்கு உடன் பிறந்த சகோதரியா? அந்தக் கதையை என்னை நம்பச் சொல்கிறாயா?"

"நானும் அந்தக் கதையை நம்பவில்லை. தங்களை நம்புமாறு சொல்லவும் இல்லை. அவனுடைய தந்தையின் வீட்டில் நான் வளர்ந்து வந்தேன். ஆகையால் என்னைச் சகோதரி என்று அழைத்து வந்தான். என்னை ஆண்டாளின் அவதாரம் என்று அந்த வைஷ்ணவன் சொல்வது வழக்கம். ஊர் ஊராக அவனுடன் நான் சென்று ஆழ்வார்களின் பாசுரங்களைப் பாடி வைஷ்ணவ சம்பிரதாயத்தைப் பரப்ப வேண்டும் என்று அவனுடைய ஆசை!"

"புத்த சந்நியாசினிகளைப் போல் உன்னையும் வைஷ்ணவ சந்நியாசினியாக்க அவன் விரும்பினானா?" என்று ஆதித்தகரிகாலர் கேட்டார்.

"அப்படி ஒன்றுமில்லை. நான் அவனைக் கலியாணம் செய்து கொண்டு தம் பதிகளாகப் பாசுரம் பாடிக் கொண்டு ஊர் ஊராகப் போகவேண்டும் என்பது அவன் ஆசை. வைஷ்ணவத்தைப் பிரசாரம் செய்ய நான் பல குழந்தைகளைப் பெற்று அளிக்க வேண்டும் என்பதும் அவன் விருப்பம்"

"சீச்சீ! அந்தக் குரங்கு மூஞ்சித் திருமலை எங்கே? நீ எங்கே? உன்னை அவன் தனக்கு மனைவியாக்கிக் கொள்ள விரும்பினானா?"

"ஐயா! என் துரதிர்ஷ்டம் அது! நான் பிறந்த வேளை அப்படி! என்னை நெருங்கி வரும் ஆண் பிள்ளைகள் எல்லாரும் துர் எண்ணத்துடனேயே என்னை நெருங்குகிறார்கள்"

"கிழவன் பழுவேட்டரையனுடைய புத்தி போன பாட்டில் மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தலை கவிழ்ந்த தற்பெருமை



ஒரு காட்டில் துறவி ஒருவர் தவம் செய்து கொண்டிருந்தார். தம்மைப் பற்றியும் தம் வாழ்க்கையைப் பற்றியும் மிக உயர்வாக நினைத்து அவர் தற்பெருமை கொண்டிருந்தார்.

ஒருநாள் மாலை நேரம், அவர் இறைவனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே ஆற்றங்கரை ஓரமாக நடந்து கொண்டிருந்தார்.

சிறிது தூரத்தில் முரட்டுத்தனமான தோற்றமுடைய ஒருவன் கள் குடித்தபடி வீற்றிருந்தான். அவன் எதிரே ஏராளமான கள் பானைகள் இருந்தன. பக்கத்தில் ஒரு பெண்ணும் இருந்தாள்.

இதைப் பார்த்ததும் துறவி, "இவன் என்ன வாழ்க்கை வாழ்கிறான்? நாள்தோறும் மேலும் மேலும் பாவத்தைத் தேடிக் கொள்கிறான். ஆனால் என்னிடம் எந்தத் தீய பெருமை பழக்கமும் இல்லை" என்று நினைத்துக் கொண்டார்.

அப்பொழுது ஆற்றில் சென்று கொண்டிருந்த ஒரு படகு கவிழ்ந்தது. அதிலிருந்த பத்துப் பேரும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

இதைப் பார்த்த துறவிக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. தவித்தபடி இருந்தார்.

நீருக்குள் மூழ்கிய மக்கள் உயிருக்குப் போராடுவதைக் கண்ட முரட்டு மனிதன் உடனே ஆற்றுக்குள் பாய்ந்தான். ஒவ்வொருவராகக் காப்பாற்றி அவர்களைக் கரை சேர்த்தான்.

பிறகு அவன் துறவியைப் பார்த்து, "ஐயா! இவர்களில் ஒருவனைக் காப்பாற்றவாவது தாங்கள் எனக்கு உதவி செய்திருக்கக் கூடாதா?" என்று கேட்டான்.

அதற்குத் துறவி, "எனக்கு உதவி செய்ய எண்ணம் தான். எனக்கு நீச்சலும் தெரியாது. என் உடலில் வலிமையும் இல்லை. நான் என்ன செய்வேன்?" என்றார்.

உடனே அந்த முரடன், "நான் எவ்வளவோ பாவம் செய்திருக்கிறேன். இருந்தாலும் இப்பொழுது செய்த இந்த வல்ல செயலுக்காக எனக்கு எவ்வளவு புண்ணியம் கிடைக்கும்? சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"நான் இவ்வளவு காலம் தவம் செய்து எவ்வளவு புண்ணியம் ஈட்டினேனோ அதைவிட உனக்கு அதிக புண்ணியம் கிடைக்கும்" என்றார் துறவி.

அன்றே அவரைப் பிடித்திருந்த தற்பெருமை ஒழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறருக்கு நாம் செய்யும் உதவிகள் நமது வாழ்வின் மதிப்பை உயர்த்தும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புதிய பயங்கரவாதச் சட்டம் - ஜனாதிபதியை சந்தித்தால் என்ன?

எந்தப் பிரச்சினையாயினும் அதனை சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாகச் சந்தித்துப் பேசுவது தீர்வை எட்டுவதற்கான மிகச் சிறந்த வழிமுறையாகும்.

அதாவது எதையும் நேரடியாகக் கையாளும் போது அங்கு சிக்கல்கள் – தெளிவின்மைகள் சீர்செய்யப்படும்.

இதற்கும் மேலாக, சம்பந்தப்பட்டவர்கள் நேரில் சந்திக்கும்போது ஏற்படுகின்ற புரிதல் என்பது உயர்வானது.

அந்தவகையில் தமிழ் மக்கள் தொடர்பான விவகாரங்களை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும் எனப் பல தடவைகள் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

மேலும் நாம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறும் வகையில் புத்திஜீவிகள் குழு செயலாற்ற வேண்டும் என்ற கருத்தும் ஏலவே இங்கு பதிவிடப்பட்டுள்ளது.

இருந்தும் அதுபற்றிய எண்ணப்பாடுகள் அல்லது மாற்றுவழிகள் பற்றிய சிந்தனைகள் எதுவுமில்லாமல் தமிழ்த் தரப்புகள் செயற்படுகின்றன.

இஃது எமது தமிழினம் தொடர்பில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவை ஏற்படுத்தவே செய்யும்.

உண்மை. புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழ் மக்களுக்கு உகந்தது அல்ல. அஃது ஏலவே இருக்கக்கூடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் இன்னொரு வடிவமாகும் எனத் தமிழ்த் தரப்புகள் முன்மொழிகின்றன.

சரி, புதிய பயங்கரவாதச் சட்டம் தமிழ் மக்களுக்குக் குந்தகமானது எனில், அதுபற்றி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்து நிலைமையை எடுத்துக்கூற வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி அநுரவைச் சந்தித்து புதிய பயங்கரவாதச் சட்டத்தில் இருக்கக்கூடிய குறை குற்றங்களை எடுத்துக் கூறி அதற்குப் பரிகாரம் காண வேண்டும்.

அவ்வாறு சந்தித்தும் ஜனாதிபதி அநுர அதுபற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனில், அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி நாம் ஆராயலாம்.

இதைவிடுத்து எடுத்த எடுப்பில் கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுப்பதென்பது ஒரு பொருத்தமான – பயன்தரக்கூடிய நடவடிக்கையாகத் தெரியவில்லை.

ஆம் கையெழுத்துப் போராட்டம் என்பது, ஜனாதிபதியுடனான சந்திப்பு வெற்றியளிக்காத பட்சத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய இரண்டாம் கட்ட நடவடிக்கையாகும்.

அதிலும் ஏலவே நாம் மேற்கொண்ட கையெழுத்துப் போராட்டங்கள் ஏதேனும் எமக்கு வகை கூறியதா? என்றால் அதுவும் இல்லை.

ஆக, தேவையுள்ளவற்றைச் செய்வது தான் பயன்தரும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# ஆசிரியர் இடமாற்றப்பட்டியல் 3 கட்டங்களாக இன்று முதல் வெளியீடு

## வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயசந்திரன்

வடக்கு மாகாணத்தில் 2026ஆம் ஆண்டுக்கான வலயங்களுக்கிடையிலான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான திருத்தப்பட்ட பட்டியல்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மூன்று கட்டங்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படவுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயசந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2025ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் பிரசுரிக்கப்பட்ட வருடாந்த இடமாற்றத்துக்கான 'சேவையின் தேவை கருதிய' இடமாற்றப் பட்டியலில் காணப்பட்ட குறைபாடுகள் சீர்செய்யப்பட்டு புதிய பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

ஆசிரியர் சங்கங்களை உள்ளடக்கிய மேன்முறையீட்டுச் சபையூடாக மேன்முறையீட்டுச் செயற்பாடுகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், சேவையின் தேவை கருதிய திருத்தப்பட்ட புதிய பட்டியலும் (ஆசிரியர் சங்கங்களைத் தவிர்த்து) தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக சேவையின் தேவை கருதிய திருத்தப்பட்ட இடமாற்றப் பட்டியல் இன்று (24), நாளை 25ஆம் திகதி மற்றும் 27ஆம் திகதி என மூன்று கட்டங்களாக இணையத்தளத்தில் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன் சேவையின் தேவை கருதிய ஆசிரியர் இடமாற்றக் கடிதங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதியும், வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் மார்ச் மாதம் 15ஆம் திகதியும் வழங்கி வைக்கப்படும் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயசந்திரன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை 2026ஆம் ஆண்டுக்கான இடமாற்றக் கோரிக்கைகளில் இடமாற்றச் சபையினூடாக 227 விண்ணப்பங்களும் மேன்முறையீட்டுச் சபையினூடாக 90 விண்ணப்பங்களும் காத்திருப்போர் பட்டியலூடாக 51 விண்ணப்பங்களுமாக மொத்தமாக 368 ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சேவையின் தேவை கருதி வழங்கப்படும் இடமாற்றம் தொடர்பில் அதிருப்தியடையும் ஆசிரியர்கள், அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள் கோவையின் XXஆம் அத்தியாயத்துக்கமைய அந்தத் தீர்மானத்துக்கு எதிராக அரசாங்கசேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார். (ம-7)

## அம்பாறையில் யானை தாக்கியதில் ஒருவர் மரணம்

(அம்பாறை)

அம்பாறை - பானம பகுதியிலுள்ள பானம ஏரிக்கு அருகில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யானை தாக்குதலுக்குள்ளான குறித்த நபர் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பானம தெற்குப் பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய வயோதிபர் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த வயோதிபர் பானம ஏரிக்கு நீராடுவதற்காகச் சென்று திரும்பியபோது காட்டு யானை தாக்கியுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது. (ம-7)

## சிறையில் தடுக்கப்பட்டுள்ள காதலனுக்கு தேநீரில் போதையைக் கலந்து கொடுத்த காதலி கைது

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 24 வயது இளைஞருக்கு போதைப் பொருள் கலந்த தேநீரை கொடுக்க முயன்ற 22 வயது யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டதாக பிலியந்தலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கொண்டு வந்த சாண்ட்விச்சில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைக் குளிசையொன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொல்கஸ்ஓவிட்ட பகுதியைச் சேர்ந்த இளைஞன், போதைப் பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவதற்காக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அவரது காதலி என்று கூறப்படும் யுவதி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (22) [illegible] இளைஞரை பார்பதற்காகச் சென்றுள்ளார்.

அந்த இளைஞனுடன் சிறிது நேரம் உரையாடிய பின், பொலிஸ் உத்தியோகத்தர்களின் அனுமதியுடன் தேநீர் அருந்துவதற்காக வெளியே சென்ற யுவதி, சிறிது நேரத்தின் பின்னர் சிறிய பையினுள் உறிஞ்சுக்குழாய் (Straw) இடப்பட்ட தேநீர் மற்றும் சாண்ட்விச் (Sandwich) என்பவற்றை எடுத்துக் கொண்டு பொலிஸ் நிலையத்திற்கு வந்துள்ளார்.

இதன்போது பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலுக்கமைய, அவர் கொண்டு வந்த தேநீர் மற்றும் சாண்ட்விச் என்பவற்றைச் சோதனையிட்டபோது அவற்றில் போதைப்பொருள் இருப்பது தெரியவந்துள்ளது. (ம-7)

## காலியில் அதிபரைத் தாக்கிய ஏழு பெற்றோர் கைது

காலி - தங்கெதர பகுதியில் அமைந்துள்ள தனியார் பாடசாலை ஒன்றின் அதிபரைத் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடைய 7 பெற்றோரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் மூவர் பெண்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 19ஆம் திகதி குறித்த பாடசாலையின் இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த போதே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த அதிபர், சிகிச்சைக்காக கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான ஒரு விவகாரமே இந்தத் தாக்குதலுக்குக் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## போதை பயன்படுத்திய சட்டத்தரணி கைது

(கொழும்பு)

கொழும்பு, வாழைத்தோட்டம் பொலிஸ் குற்றப்பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், போதைப் பொருள் பயன்படுத்திக் கொண்டிருந்த சட்டத்தரணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாஞ்சியாரச்சி மாவத்தைப் பகுதியிலுள்ள பாழடைந்த கட்டடம் ஒன்றில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது அவரிடமிருந்து 'ஐஸ்' ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில், கைது செய்யப்பட்டவர் களுபோவில, சரணங்கர வீதியைச் சேர்ந்த 54 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

1996 ஆம் ஆண்டு சட்டத்தரணியாகப் பதவியேற்ற இவர், புதுக்கடை நீதிவான் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றத்தில் பணியாற்றி வருபவர் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 30

**என்.சொக்கன்**

அப்பேர்ப்பட்ட அமெரிக்காவில், ஏதோ ஒரு தீவிரவாத இயக்கம் சட்டென்று உள்ளே "நுழைந்து பட்டாசு வெடித்துவிடமுடியுமா என்ன? இந்த எண்ணம்தான் அமெரிக்க அரசாங்கத்தைக் கொஞ்சம் அசட்டையாக இருக்கச் செய்துவிட்டது.

சிஐஏவைப் பொறுத்தவரை, ஏதோ பெரிய தாக்குதல் நடக்கப்போகிறது என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் அதைச் செய்யப் போவது யார் என்பதுதான் சரியாகத் தெரியவில்லை.

உண்மையில், அந்தத் தகவலும் அப்போது அவர்களிடம்தான் இருந்தது. ஆனால் அதைச் சரியாகக் கவனிக்க / துப்பறியத் தவறி விட்டார்கள்.

1999ஆம் ஆண்டு, ஜேர்மன் உளவுத்துறை சிஐஏவைத் தொடர்பு கொண்டிருந்தது. அப்போது ஜேர்மனியில் வாழ்ந்துகொண்டிருந்த ஒரு தீவிரவாதியின் தொலைபேசி இணைப்பை ஒட்டுக்கேட்டபோது, எதேச்சையாக ஒரு தகவல் அவர்களுக்குச் சிக்கியிருந்தது.

யாரோ அமெரிக்கா மீது ஒரு பெரிய தாக்குதல் நிகழ்த்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதை நடத்தப்போகிற குழுவைச் சேர்ந்த ஒரு நபரின் பெயர் மார்வான் (முழுப்பெயர் Marwan AiShehhi). அவனுடைய தொலைபேசி எண் இது.

மேற்படி தகவல்களை ஒப்படைத்ததும், ஜேர்மன் உளவுத்துறையின் கடமை முடிந்துவிட்டது. அதற்குமேல் எல்லாவற்றையும் சிஐஏ பார்த்துக் கொள்ளும் என்று அவர்கள் நினைத்தார்கள்.


சிஐஏ என்ன செய்தது? மார்வான் என்கிற பெயரையும், அந்த ஆளுடைய தொலைபேசி எண்ணையும் குறித்துவைத்துக்கொண்டு, அதோடு விடயத்தை மறந்துவிட்டார்கள்.

அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. வருடம்முழுவதும் இப்படி ஏகப்பட்ட தீவிரவாதிகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி எண்கள், ஈ-மெயில் அட்ரஸெல்லாம் அவர்களுக்குக் கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது.

அத்தனையையும் ஒவ்வொன்றாகத் தோண்டித் துருவுவதற்கு நேரம் பிடிக்குமில்லையா?

இதனால்தான், அமெரிக்காமீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்த குழுவின் தும்பு கையில் கிடைத்தும் கூட சிஐஏ "ஜஸ்ட் லைக் தட்" அதைத் தவறவிட்டது. அது எத்தனை காஸ்ட்லியான பிழை என்பது. அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

மார்வான் தனி நபர் இல்லை. அவனோடு, ஒரு மிகப் பெரிய குழு இருந்தது. வலுவான இயக்கப் பின்னணி இருந்தது. என்ன செய்ய வேண்டும். எப்படிச் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொடுக்கவும் வழி நடத்தவும் ஒரு "தலைவர்" இருந்தார்.



**ஒஸாமா பின் லேடன்!**

பின் லேடனின்"அல் காய்தா" (Al Qaeda) இயக்கத்தைப்பற்றியும், அதன் அடிப்படைக் கொள்கைகள், கட்டமைப்பு, போர்ப் பயிற்சி நடவடிக்கைகள், படை பலம். ஆயுத பலம் என்று சகல விடயங்களையும் சிஐஏவுக்கு அத்துப்படியாகியிருந்தது. சந்தர்ப்பம் கிடைத்தால். அமெரிக்காமீது தாக்குதல் நடத்தக்கூடிய அமைப்புகள்" என்று சிஐஏ தயாரித்துவைத்திருந்த ஒரு பட்டியலில், அல் காய்தாவுக்கு ஒரு முக்கியமான இடம் இருந்தது.

ஆனால், இவை எல்லாமே, பொதுவான தகவல்கள்தான். இவற்றைத் தாண்டி, அல் காய்தாவின் அடுத்த திட்டங்கள். அவை செயல்படுத்தப்படவிருக்கும் விதம். இடம். நாள், கிழமை என்பதெல்லாம் சிஐஏவுக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஒரு மனிதர் கறுப்பா, சிவப்பா என்று தெரிந்துவைத்திருப்பதற்கும், அவர் இன்று சாயங்காலம் ஆறு மணிக்கு எங்கே இருப்பார், என்ன செய்து கொண்டிருப்பார் என்பதைத் தெரிந்து கொள்வதற்கும் வித்தியாசம் இருக்கிறதில்லையா? அங்கேதான் சிஐஏ தவறிவிட்டது.

அல் காய்தாவும் ஒஸாமா பின் லேடனும் அமெரிக்காவுக்கு விரோதமாக ஏதோ செய்யக்கூடும் என்பது மட்டும் தெரியும். ஆனால், இவர்கள்தான் உள்ளே நுழைந்து தாக்கப் போகிறார்களா என்பது தெரியாது. அப்படியே தாக்கினாலும், எங்கே, எப்போது, எப்படி என்று ஒரு விபரமும் தெரியாது.

கேட்பதற்கு மடத்தனமாகத் தோன்றுகிறதில்லையா? அதனால் தான், சிஐஏ அமெரிக்க அரசாங்கத்திடம் விபரமாக எதுவும் சொல்லவில்லை. "ஏதோ தாக்குதல் நடக்கப்போகிறது" என்று பொதுவாகக் குறிப்பிட்டதுடன் நிறுத்திக்கொண்டுவிட்டார்கள்.

இந்த எச்சரிக்கைக்குப்பிறகும், தாக்குதல் முயற்சிகளைத் தடுக்க சிஐஏ தன்னால் முடிந்ததைச் செய்து கொண்டுதான் இருந்தது. ஆனால் இவனா. அவனா, எவன் தாக்கப் போகிறான் என்பது நிச்சயமாகத் தெரியாததால். கவனம் சிதறிவிட்டது.

தீவிரவாதத் தடுப்பு நடவடிக்கைகளில் சிஐஏவுக்குச் சுமார் பதினைந்து ஆண்டுகால அனுபவம் உண்டு. தவிர. உலகம் முழுவதும் அவர்களுடைய உளவு நெட்வொர்க் வலுவாக அமைந்திருந்தது.

இதன்மூலம், பல தீவிரவாத இயக்கங்களைப்பற்றிய தகவல்கள் தொடர்ந்து திரட்டப்பட்டன. நூற்றுக் கணக்கான தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டார்கள். ஏராளமான சதித் திட்டங்கள் முறியடிக்கப்பட்டதாகவும் சொல்கிறது சிஐஏ.

ஆனால் அதே நேரத்தில், அவர்களுடைய கண்ணுக்குச் சிக்காமல் ஒரு மிகப் பெரிய சதி உருவாகிக் கொண்டிருந்தது. அதை நிறைவேற்றப் போகிறவர்கள் அமெரிக்காவிலேயே தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

அல் காய்தா இயக்கத்தினுள்கூட மிகச் சிலருக்குமட்டும் தெரிந்திருந்த இரகசியத் திட்டம் அது. துளி பிசிறு இல்லாதபடி அதனைக் கச்சிதமாக உருவாக்கிக் கொண்டிருந்த சூத்திரதாரி, ஒஸாமா பின் லேடன்.

ஒருகாலத்தில், சோவியத் ஆஃப்கான் யுத்தத்தின்போது, அமெரிக்கா / சிஐஏ ஆஃப்கானிஸ்தானுக்கு ஆதரவாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த்து. அப்போது, அதே ஆஃப்கானிஸ்தானின் விடுதலைக்காகப் பாடுபட்டுக்கொண்டிருந்த எண்ணற்ற ஆர்வலர்களில் ஒஸாமா பின் லேடனும் ஒருவர்.

அப்போது, அமெரிக்கா ஒஸாமாவைத் தீவிரவாதியாக நினைக்கவில்லை. ஆஃப்கானிஸ்தானிலிருந்து சோவியத் யூனியனை வெளியேற்றுவதற்காகப் பாடுபடும் போராளி என்றுதான் வகைப்படுத்தியிருந்தார்கள். அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தரவும் தயாராக இருந்தார்கள்.

ஆஃப்கான் யுத்தத்தில், சோவியத் யூனியன் தோல்வியடைந்து வெளியேறியது. இதனை, அமெரிக்கா தனது வெற்றியாகக் குறிப்பிட்டுக்கொண்டது.

இதுவரை, அமெரிக்காவும் பின் லேடனும் ஒரே கட்சியில்தான் இருந்தார்கள். அதன்பிறகுதான், உறவு கசந்து பிரிவு வந்து, பிறகு அது வெறுப்பாகவும், அழிக்கும் வெறி, ஆவேசமாகவும் மாறிவிட்டது.

பின் லேடனைப் பொறுத்தவரை, ஆஃப்கானிஸ்தானிலிருந்து சோவியத் யூனியனை வெளியேற்றியது எந்தத் தனி நபர் நாட்டின் சாதனை அல்ல. பத்து ஆண்டுகளுக்குமேலாக ஏராளமான இளைஞர்கள் தன்னலம் பார்க்காமல் உழைத்து, தங்கள் உயிரைத் தியாகம் செய்து இதை முடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு புனித யுத்தத்தின் வெற்றியை, அமெரிக்கா தனக்கு மட்டும் உரிமையாகக் கொண்டாடுவது பின்லேடனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இளவாலையில்...

பகுதியில் மோட்டார் குண்டு ஒன்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

உரப்பையில் போட்டு, காட்டுப் பகுதியில் குறித்த மோட்டார் குண்டு வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவைப் பெற்றபின் குறித்த குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## கஞ்சாவுடன்...

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய நாகர்கோவில் கிழக்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்று நேற்று திங்கட்கிழமை (23) காலை சோதனையிடப்பட்டது.

இதன்போது ஒரு கிலோ 600 கிராம் கேரளக் கஞ்சாவுடன் 22 வயதுடைய இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு மருதங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7,60)

## 12 இந்திய...

இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களின் படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் புத்திக்க சம்பத் தெரிவித்தார்.

மன்னார் தெற்குக் கடற்பரப்பில் கடற்படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.(ம-7)

## விபரீத முடிவெடு...

துள்ளார்.

தனிப்பட்ட குடும்பப் பிரச்சினை காரணமாகவே மேற்படி இளம் குடும்பஸ்தர் உயிரை மாய்த்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரது சடலம் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7,30)

## கட்டிடப்படியால்...

குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் ஊரெழு மேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த வைத்தியலிங்கம் ஜெயச்சந்திரன் (வயது-57) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சகோதரனினால் ஊரெழுப் பகுதியில் அமைக்கப்படும் மூன்று மாடிக் கட்டிடத்தின் படிக்கட்டால் நேற்றுத் திங்கட்கிழமை (23) அதிகாலை 12.40 மணியளவில் தவறிவிழுந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்தார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## கடந்த கால...

லளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாமல் ராஜபக்ஷ லண்டன் செல்வதற்கு இந்த அரசு எந்தத் தடையையும் விதிக்கவில்லை. ஆனால், அவர் அங்கு செல்லும்போது மக்கள் ஏன் கறுப்புக்கொடி காட்டுகின்றார்கள்.

ஏன் அவரது உரையை இரத்துச் செய்யச் சொல்கின்றார்கள் என்பதை அவர்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த காலங்களில் அவர்கள் செய்த தவறுகளின் விளைவைத்தான் இன்று சர்வதேச ரீதியாக அறுவடை செய்கின்றார்கள். அதற்கும் எமது அரசுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

தமது தோல்விகளுக்கும் சர்வதேச ரீதியாகத் தமக்கு ஏற்படும் அவமானங்களுக்கும் தேசிய மக்கள் சக்தி அரசின் மீது பழிபோடுவது ராஜபக்ஷக்களின் வழக்கமான [illegible] டது.

லண்டனில் இருப்பவர்கள் தன்னிச்சையாகப் போராடுகின்றார்களே தவிர, நாங்கள் யாரையும் தூண்டிவிடவில்லை. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமக்குச் செல்வாக்கு இல்லை என்பதை ராஜபக்ஷ தரப்பினர் இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டும்.

அவர், லண்டனில் உரை நிகழ்த்துகின்றாரா?, இல்லையா? என்பது எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. அவர் மீதுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் முறைகேடுகள் குறித்த விசாரணைகள் இங்கு சட்டப்படி தொடரும்.

அதேபோன்று, வெளிநாடுகளில் தப்பித்து ஓடி ஒளிந்தாலும், மக்கள் பணத்தைச் சூறையாடியவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என காட்டமாகப் பதிலளித்துள்ளார். (ம-7)

## தமிழர்களின்...

யில்,

இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இலங்கையின் இந்த அமைவிடத்தைக் கைப்பற்றுவதற்காகப் பல வல்லரசுகள் போட்டிபோடுகின்றன. இவ்வாறானதொரு சூழலில் நாட்டில் ஸ்திரத்தன்மை என்பது மிகவும் அவசியமானது. ஸ்திரத்தன்மை இல்லாத பட்சத்தில் வெளிநாட்டினரின் தலையீடுகள் மேலும் அதிகரிக்கும் என அவர் சுட்டிக் காட்டினார்.

நாட்டின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்க வேண்டுமானால், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குக் கட்டாயமாகத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும், தமிழ் மக்களின் இனப்பிரச்சினை இன்றும் தீர்க்கப்படாமல் தொடர்கிறது என்ற நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் தீர்வு எட்டப்படாத பட்சத்தில், தமிழ் மக்கள் தங்களது அபிலாஷைகளைக் கைவிட்டு, இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குத்

தள்ளப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## யாழில் ஜனாதி...

பங்களுக்கான மீள்குடியேற்ற வீடமைப்புத் திட்டத்திற்கான உதவி வழங்கும் நிகழ்வில்" கலந்து கொள்வதற்காக பொதுமக்களை அழைத்து வருவதற்காக 11 தனியார் பேருந்துகளை சேவைக்கு அமர்த்தியதாகவும் அதற்காக 2 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும் மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை ஜனவரி 16ஆம் திகதி "முழு நாடும் ஒன்றாக" போதை ஒழிப்பு நிகழ்வுக்காக கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி மைதானத்திற்கு மக்களை அழைத்து வர இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 75 பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தியதாகவும், அதற்காக 23 இலட்சத்து 43 ஆயிரத்து 885 ரூபாய் கொடுப்பனவு வழங்கியதாகவும் மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2026.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 6114
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: D 8 7 5 2 2 7
அத சம்பத
D 5 2 2 7
சீட்டிழுப்பு இலக்கம் 0689
National Lotteries Board

சுப தவசக
திகதி 2026.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 0230
கன்னி 22 29 67
8571

தன நிதானய
திகதி - 2026.02.23
சீட்டிழுப்பு இலக்கம் - 2144
R 23 41 49 77 R

மெகா பவர்
திகதி 23/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2462
O 13 09 14 30 49

ஜய
திகதி 2026.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 0382
W 2 5 4 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4356
சீட்டிழுப்பு திகதி 23.02.2026
P 23 32 42 45
P

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 1423
விருச்சிகம் 04 33 47 55 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.02.2026 வெற்றி வாரம் 0822
M 7 7 6 1 9 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,056,354.00

Super Ball
சீட்டிழுப்பு வாரம் 3088
சீட்டிழுப்பு திகதி 2026.02.23 தினம் திங்கட்கிழமை
11 22 27 58 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 101,059,872.80

சனிதா
திகதி 23.02.2026 வெற்றி வாரம் 5249
30 55 61 67 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,092,141.20

சசிரி
வெற்றி வாரம் 918
சீட்டிழுப்பு திகதி 23.02.2026 திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 32 35 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,680,080.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4800
சீட்டிழுப்பு திகதி 23.02.2026 தினம் திங்கட்கிழமை
16 19 32 46 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,645,339.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 02 12 21 44 62
2264
23.02.2026 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.1,58,257,082.00

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2914
சீட்டிழுப்பு திகதி: 2026.02.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.93,156,429.60
19 37 57 72 H


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நேற்று ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நீண்ட காலமாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்ச்சியாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதோடு தேவையான நடவடிக்கையும் எடுத்துள்ளது.

இப்போதும் அது குறித்த அதிகாரிகளுக்கு அறியப்படுத்தியுள்ளோம். விசேடமாகப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துப்படுத்தும் அனைத்து கட்சிகளும் மற்றும் பிரதிநிதிகளும் விரைவில் பாராளுமன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் நடத்துவதற்கான சட்டத்திட்டங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குறித்த சட்டத்திட்டங்கள் நிறைவடைந்த உடன் நாங்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் எனக் குறிப்பிட்டார். (ம-7)

## நம்பிக்கைக்குரிய நண்பன் இந்தியா

### ரில்வின் சில்வா

இந்தியாவை ஒரு நம்பிக்கைக்குரிய நண்பராகவும் பங்குதாரராகவும் தான் கருதுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தியா தொடர்பான தனது கட்சியின் பழைய நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டதாகவும் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இதனூடாக மக்கள் விடுதலை முன்னணி ஆரம்ப காலத்தில் இந்திய விரிவாக்கக் கொள்கை குறித்து ரோஹண விஜேவீர கொண்டிருந்த கடுமையான கருத்துக்கள் ரில்வின் சில்வாவின் இந்தியப் பயணத்துக்குப் பின்னர், மாறியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ம-7)

## மணப்பெண் தேவை

1. சுன்னாகம், இந்து, 1993, அனுசம், MBA, UK Electronic Engineering Moratuva University மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (57017).
2. மாதகல், இந்து, 1991, பரணி, Engineering (UK), Managment officer, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53670)
3. அச்சுவேலி - புத்தூர், இந்து, 1986, பூரட்டாதி, B.Eng electrical and Electonic (ICBT), Electrical Engineer மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51945)
4. உடுவில், இந்து, 1993, பூரம், B.Eng (Hons) in Civil and Structural, Project Engineer, Singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52945)
5. யாழ்., Roman Catholic, 1980, BBM, Manager, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை (57444)
6. யாழ். Town, இந்து, 1994, திருவோணம், BSc in Mechanical Engineering, MSc (Canda), Mechanical Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (54640).
7. பருத்தித்துறை, இந்து, 1981, கேட்டை, BSc in Network Engineering, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை (53849).
8. தெல்லிப்பழை, இந்து, 1996, சித்திரை, Master of Business Management, Government Job, Newzealand citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (36133).
9. யாழ்.Town, இந்து, 1991, உத்தரம், CIMA fully qualified, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (29780)
10. உடுப்பிட்டி, இந்து, 1995, மகம், Bechelor of Business Management, Banker மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (56018)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு. (6881)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 077 992 1494

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5046) 076 825 7716 (ஆகாஸ்)

## கட்டிடம் வாடகைக்கு

சங்கானை பிரதான வீதியில் அமைந்துள்ள சிங்கர் கம்பனி கட்டிடம் மார்ச் 2026இல் இருந்து வாடகைக்கு விடப்படும்.

இக் கட்டிடம் கீழ்தளம் மற்றும் மேல்தளம் கொண்டதாகும். இதன் விஸ்தீரணம் 2445 சதுர அடியாகும்.

இக் கட்டிடத்தின் இடதுபக்கம் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் மற்றும் மக்கள் வங்கியும் இத்துடன் புதிதாக வரவுள்ள சிங்கர் கம்பனியுமாகும். வலதுபக்கத்தில் சம்பத் வங்கி மற்றும் செலான்வங்கியும் அமைந்துள்ளது. (6907)

0041 7984 61782
077 601 3566

## இலங்கையில் இருந்து கனடாவிற்கு

கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப



10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg

DELIVERY ▶ 2-3 Months

எமது நேரடி கிளைகள்: திருகோணமலை, வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, கோப்பாய், சுன்னாகம், கொடிகாமம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், நெல்லியடி (C-5045)

V2 TRAVELS 076 822 6244 / 076 455 0672

## வேலைவாய்ப்பு

| | |
|---|---|
| நிறுவனத்தின் வகை | : ஒருங்கிணைந்த பண்ணை மற்றும் பனைசார் உணவு பதனிடல் |
| பதவி | : முகாமையாளர் |
| இடம் | : பூநகரி, கிளிநொச்சி |
| கொடுப்பனவு | : 100,000/- வரையில் (அனைத்து கொடுப் பனவுகளும் அடங்கலாக) |

**எதிர்பார்க்கப்படும் தகமைகள்:**

- பண்ணையில் தங்கி நின்று வேலை செய்யக்கூடியவராக இருத்தல்
- துறைசார் முன் அனுபவத்துடன் கூடிய டிப்ளோமா பட்டதாரியாக இருத்தல்

(0000)

## 27 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01.01.1922 | மறைவு 23.02.1999

ஸ்ரீமான்

## சின்னையா நல்லையா

( 6ஆம் வட்டாரம், மண்டைதீவு )

ஐயா! என்றும் உங்கள் நினைவுடன்.
உங்கள் ஆத்மா திருவெண்காட்டுப் பெருமானின்
திருவடிகளில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.


இல. 21/3 A, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.

குடும்பத்தினர் (க)

## மரண அறிவித்தல்

## நடராசா சிறிதரன்

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/செட்டித்தெரு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை)



யாழ்.கலட்டியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிறிதரன் அவர்கள் நேற்று (23.02.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - யோகரெத்தினம் தம்பதியினரின் மூத்த புதல்வனும் இரத்தினம் - கண்மணி தம்பதியினரின் மூத்த மருமகனும் விஜயதேவி அவர்களின் பாசமிகு கணவரும் ராதிகா (ஆசிரியர் - யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), சதீஸ் (வருகைதரு விரிவுரையாளர், தொழிநுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்), கார்த்திகா (ஆசிரியர், யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சசிதரன் (Royal electronics, நெல்லியடி), கீதா, செல்வமகேசன் (ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிறீச்சந்திரமோகன் மற்றும் லலிதாதேவி, லீலாதேவி, சுகந்தாதேவி, யசோதாதேவி, சிறிரஞ்சன் ஆகியோரின் அன்பு பெரியண்ணாவும் அன்பரசி, காலஞ்சென்ற மகாலிங்கம், சிவப்பிரகாசம், குணபாலசிங்கம், கமலேஸ்வரன், கலாவாணி, காலஞ்சென்ற வரதராஜா, கமாலதேவி, காலஞ்சென்ற பேரின்பதேவி, லீலாதேவி, பரிமளதேவி, நற்குணராசா, பத்மாதேவி, காஞ்சனாதேவி, லதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிரூபன் (computer science, university of colombo), நிரோஷிகா (Faculty of medicine, University of Jaffna), கலாபன் (யாழ்.இந்துக் கல்லூரி), சௌமியா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சிவப்பிரியன் (யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2026) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

67/8, ஐயனார்கோவில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (2082)

மகன் - 077 711 1888
மருமகன் - 077 304 0512
மருமகன் - 077 741 9352

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.